DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 13 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution D.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண்குமார் | தொழில் | : | சுயதொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | துரைசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | சுக்கிட்டி பாளையம் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 02.09.2021.

**சாட்சி தன்னை சாட்சியாக விசாரித்துக்கொள்ள மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு, எதிரி தரப்பில் முதல் விசாரணை:**

நான் சுக்கிட்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் நானும் ஒரு பங்குதாரர் ஆவேன். ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் ஒரு பங்குதாரர் நிறுவனம் ஆகும். 29.05.2015 தேதியிட்ட பங்குதாரர் ஒப்பந்தத்தின் சான்று நகல் எ.த.சா.ஆ.1, 16.06.2015 தேதியிட்ட தொழில் கூட்டு நிறுவன பதிவு அறிவிப்பின் சான்று நகல் எ.த.சா.ஆ.2, 21.07.2015 தேதியிட்ட ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்சின் பதிவு சான்றின் சான்று நகல் எ.த.சா.ஆ.3. புகார்தாரர் நாகரத்தினத்தை எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கும், புகார்தாரருக்கும் எத்தகைய பழக்கமும் இல்லை. என்னுடைய எக்ஸ்போட்ர்ஸ் நிறுவனத்திற்கும், புகார்தாரருக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. நான் புகார்தாரரிடம் எப்போதும் பண வரவு செலவு

STC 13/ 2019 நாள். 02.09.2021 D.W.1 முதல் விசாரணை தொடர்ச்சி

செய்ததில்லை. கடந்த 11.08.2018 தேதியன்று ரூ.6,00,000/– தை புகார்தாரரிடமிருந்து பெற்றதாக சொல்வது பொய்யானதாகும். அதற்கு ஆதரவாக வழக்கு காசோலை கொடுத்ததாக சொல்வதும், பொய்யானதாகும். காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு திரும்பிய விபரம் எதுவும் எனக்கு தெரியாது. நான் வழக்கு காசோலையை, பெரியசாமி என்பவர் மூலம், ஒரு அருண்குமாருக்கு கொடுத்திருந்தேன். நான் கடந்த 03.03.2017 தேதியில் அருண்குமாரிடம் ரூ.1,50,000/– கடனாக பெற்று அதற்கு ஆதரவாக வழக்கு காசோலையை அருண்குமார் வசம் கொடுத்திருந்தேன். அருண்குமார் ரூ.1,50,000/–ஐ அவரது வங்கி கணக்கிலிருந்து, எனது வங்கியான தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் கணக்கிற்கு ஆர்.டீ.ஜி.எஸ் மூலம் அனுப்பினார். அதற்கான வங்கி வரவு செலவு பட்டியலை தாக்கல் செய்கிறேன். வங்கி கணக்கு எண்.407150050800030 வங்கி கணக்கிற்கான கடந்த 27.08.2015 தேதி முதல் 02.04.2019 தேதி வரையிலான வரவு செலவு பட்டியலின் கணிணி நகல் எ.த.சா.ஆ.4, மேற்சொன்ன ரூ.1,50,000/–க்கு நாள் ஒன்றுக்கு ரூ.375/– வட்டியாக நிர்ணயம் செய்யப்பட்டு, நான் அருண்குமார் வசம் செலுத்தி வந்தேன். என்னுடைய வங்கி கணக்கிலிருந்து அருண்குமாரின் வங்கி கணக்கிற்கு வட்டி செலுத்தி வந்தேன். எனது வங்கி கணக்கில் உள்ள ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி கணக்கு எண்.155701501484 ன் கடந்த 01.02.2017 தேதி முதல் 30.01.2018 தேதி வரையிலான வங்கி கணக்கு பட்டியலின் சான்று நகல் எ.த.சா.ஆ.5, நான் அருண்குமாரிடம் பெற்ற கடனுக்கு அவர் என்னிடம் செக்யூரிட்டியாக காசோலை கேட்டார். நான் என்னுடைய, வங்கியான தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியால் ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காசோலைகள் 004466, 004467, 004468 காசோலைகள் மற்றும் என் அப்பா, என் தாத்தா பெயரிலான வீட்டு பத்திரங்களின் அசல் ஆகியவற்றை அருண்குமார் வசம் செக்யூரிட்டிக்காக கொடுத்தேன். நான் அருண்குமாரிடம் பெற்ற ரூ.1,50,000/–க்கு வட்டி மற்றும் அசலுடன் செலுத்தி வந்தேன். அருண்குமார் என்னிடம் வட்டிக்கு வட்டி கேட்டார். அதனால் எனக்கும், அருண்குமாருக்கும் இடையில்

STC 13/ 2019 நாள். 02.09.2021 D.W.1 முதல் விசாரணை தொடர்ச்சி

மனஸ்தாபம் ஏற்பட்டது. அருண்குமார் கோவை ஐ.டி கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். புகார்தாரர் நாகரத்தினம் அருண்குமாரின் அப்பா ஆவார். எனக்கு முதலில் அறிவிப்பு வந்தபோது புகார்தாரர் யார் என்று தெரியவில்லை. பின்பு, விசாரித்தபோது தான், புகார்தாரர் அருண்குமாரின் அப்பா என்று தெரிந்தது. நான் அறிவிப்பினை பெற்றுக்கொண்டு, கடந்த 03.04.2019 தேதியன்று ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினேன். 03.04.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பு எ.த.சா.ஆ.6, அறிவிப்பை கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை எ.த.சா.ஆ.7, (கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அவர்களால் பதில் அறிவிப்பானது காலங்கடந்து, வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, கோப்புக்கு எடுக்கப்பட்ட பின் அனுப்பப்பட்டுள்ளதுஎன ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). அதேபோல், நான் அருண்குமாருக்கு கடந்த 09.04.2019 தேதியன்று, ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன், 09.04.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு எ.த.சா.ஆ.8, அறிவிப்பை அருண்குமாருக்காக அவரது தகப்பனாரான புகார்தாரர் பெற்றுக்கொண்டுள்ளார். அதற்கான 20.04.2019 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை எ.த.சா.ஆ.9, ( கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அவர்களால் இந்த அறிவிப்பு தொடர்பாக புகார்தாரருக்கு தெரியாது என்றும், இவ்வழக்கிற்கு தொடர்பற்றது எனவும், ஆட்சேபனை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) புகார்தாரர் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததை,வாபஸ் பெறவேண்டும் என்றும், மற்ற 2 காசோலைகளையும், அசல் பத்திரங்களையும் திரும்ப கொடுக்க வேண்டுமென்று, கேட்டு அருண்குமாருக்கு நோட்டீஸ் அனுப்பினேன். அதன்பின்பு, நான் எனது வங்கிக்கு கடந்த 09.04.2019 தேதியில், காசோலை எண்கள்.004467, 004468, ஆகியவற்றிற்கு ஸ்டாப் பேமண்ட் கடிதம் கொடுத்தேன். 09.04.2019 தேதியிட்ட கடிதத்தின் கைநகல் மற்றும் அஞ்சலக இரசீது எ.த.சா.ஆ.10, நான் அளித்த கடிதத்தின்படி வங்கியில் ஸ்டாப் பேமண்ட் செய்து கடிதம் அனுப்பப்பட்டது. 10.04.2019 தேதியிட்ட கடிதத்தின் அசல் எ.த.சா.ஆ.11, ( கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அவர்களால் மேற்சொன்ன

STC 13/ 2019 நாள். 02.09.2021 D.W.1 முதல் விசாரணை தொடர்ச்சி

ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்பற்றது என்றும், இவ்வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என ஆட்சேபனை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) இவ்வழக்கில் ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு சம்மன் எதுவும் வரவில்லை. ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் நான் புரப்பேரேட்டராக இருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு காசோலைகளை நான் அருண்குமாருக்கு கொடுத்ததை, அவரது அப்பா மூலம் பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். அதனால், நான் புகார்தாரரிடம் எப்போதும் கடன் பெறவில்லை, காசோலை கொடுக்கவும் இல்லை. எனவே, புகாரை தள்ளுபடி செய்து என்னை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் நானும், எனது அத்தை எஸ்.கௌசல்யாவும் பங்குதாரர் ஆவோம்.

கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.